# ஈழத்தமிழ்ச் சங்கம் விக்டோரியா

# EELAM TAMIL ASSOCIATION VICTORIA

## தமிழ் பாடசாலைகளின் கூட்டமைப்பு
## TAMIL SCHOOL BOARD



# Curriculum
# Standard
# Framework
# Levels 5 & 6



P.O BOX 568
Glen Waverley 3150
Victoria, Australia

## Level 1

இந்தத்தரத்தில் (Level 1) மாணவர்கள் தாம் கேட்கும், காணும், பழகும் பொருட்கள், சொற்கள் முதலியவற்றுடன் தொடர்புபட்டதாக வகுப்பறையில் தமிழைக் கற்பர். புலக்காட்சிகளுடன் தொடர்புபட்டதாக ஐம்புலன்களாலும் சூழலை அவதானித்து அவற்றைப் பேசவும், காட்டவும், வரையவும் தமிழைப் பயன்படுத்துவர். இவற்றுக்கு பாடல்கள், விளையாட்டுக்கள், திட்டமிடப்பட்ட செய்கைகள், மனனம்செய்தல், உச்சரித்தல் என்பன உதவும்- அறிவுறுத்தல்கள், விளக்கங்கள், வினாக்கள், வாழ்த்துக்கள், வணக்கம் தெரிவித்தல் முறைகள் என்பவற்றுடன் விளையாட்டுக்களிலும், செயற்பாடுகளிலும் தமிழைப் பயன்படுத்துவர். விலங்குகள், இலக்கங்கள், நிறங்கள் தொடர்பான தமிழ்ச்சொற்களை உபயோகிப்பர். மொழியுடன் சைகைகள், முகபாவனை, குரலொலி வேறுபாடுகள் முதலானவையும் சேர்த்துப் பயன்படுத்தப்படும். தமிழ் மொழிபற்றியும் அதிலுள்ள எழுத்துக்கள் பற்றியும் அது ஒரு தொடர்புகொள் சாதனமாகப் பல்லாயிரம் வருடங்களாகப் பயன்படுவது பற்றியும், தமிழ் பேசப்படும் இடங்கள், அவுஸ்திரேலியச் சூழலில் தமிழ் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் பற்றியும் விளக்கம் பெறுவர். படங்கள், ஒளிநாடாக்கள், தட்டுக்கள் மூலம் தமிழர் பண்பாட்டில் வணக்கம் செலுத்தும் முறைகள், வேறுபாடான முகபாவனைகள், பழக்கவழக்கங்கள் அவுஸ்திரேலியச் சூழலுடன் ஒத்த வேறுபாடான விடயங்கள் முதலானவற்றை அறிவர்.

## Level 1

### Context of language use

இந்த தரத்தில் தமிழ்மொழி பயிலலின் சந்தர்ப்பங்களும் உள்ளடக்கங்களும் வீடு, வகுப்பறை, பாடசாலை ஆகிய சூழல், கிட்டிய அனுபவங்கள் என்பவற்றையும், கற்பனை அம்சங்களையும் கொண்டிரு-ப்பதுடன் மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடனும் அவாவுடனும் ஊக்கமாகப் பயில்பவர்களாக இருப்பர்.

### Tasks

Tasks, செயற்பாடுகளுடன் கூடியதாக அனுபவங்களைக் கொண்டதாக மாணவர்களால் எளிதில் அடையாளங் காணக்கூடியவையாக அமையும். ஆசிரியரின் முகபாவனை அபிநயம், தொனி, குரல் என்பவற்றுடனும் காட்சிகள், மாதிரிகள், அட்டவணைகள், சித்திரங்கள், அசையும் அசையாப் படங்கள் என்பவற்றுடனும் இணைந்தனவாக இருக்கும். ஆசிரியர் தான் தமிழில் உரையாடுவதிலிருந்து மூலக்கருத்தினை மாணவர் பெறக்கூடியதாக அல்லது ஆசிரியரின் உதவியுடன் (சிறு Clues உடன்) மாணவர்கள் "போலச் செய்யக்" கூடியவர்களாக அமையும். பல்வேறுபட்ட செயற்பாடுகளால் பாட்டு, நாடகம், கதை, படங்கள், விளையாட்டுக்கள்( எண்ணல், கூறல், கண்டுபிடித்தல், வெட்டுதல், ஒட்டுதல், கீறுதல்) முதலானவைகளூடாக வாசிப்பு, எழுத்து, கேட்டல், பேச்சு என்பவற்றைச் செய்யக்கூடியவராவர்.

### Texts

பாடஉள்ளடக்கம் (Texts) சிறியவையாகவும், மிகவும் தெளிவான விளக்கங்கள் சிறந்த ஒழுங்கான அமைப்புக்கள் கொண்டவையாகவும், இலகுவான கதைகள், படங்கள், சுவரொட்டிகள், நொடிகள், மாதிரிகள் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டவையாக அமையும்.

மொழி தெளிவான உறுதிப்பாடுடையதாக வழுக்களெதுவுமற்று இருப்பதுடன் சரியான விளக்கங்களையும், படங்கள், விளக்கவுருக்கள், காட்சிப்பொருட்கள் மாதிரிகள் கொண்டவையாக பேச்சு, எழுத்து முதலிய நால்வகைச் செயற்பாட்டையும் எளிதில் அடையக்கூடியனவாகவும் இருக்கும்.

## 1.1.1 கேட்டல்

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள்(Indicators) | உபகரணங்கள் | உசாத்துணைகள் |
|---|---|---|---|---|
| இந்த தரத்தில்( level ) மாணவர்கள் தாம் வழமையான வகுப்பறைச் செயற்பாடுகள் மூலம் தமிழ்ச் சொற்கள், சிறிய சொற்றொடர்கள், நிறங்கள் (5) பொருட்களின் பெயர்கள், (1-20) இலக்கங்கள் முதலியவற்றை விளங்கிக்கொள்ளக் கூடியவராகவும் விளங்குவர். | அம்மா, அப்பா –<br>ஆசிரியர், மாணவர் -<br>ஐந்து, 5<br>கறுப்பு, கறுப்புக்குடை<br>சொற்கள்<br>படங்கள்<br>இலக்கங்கள்<br>வணக்கம் வாருங்கள்<br>போய்வருகிறேன்<br>பெரியமேசை<br>சிறியகதிரை<br>மழைபெய்கிறது<br>வாசியுங்கள்<br>நடவுங்கள்<br>நன்றிவணக்கம்<br>பிறந்தநாள் வாழ்த்துக்கள் | சரியான உச்சரிப்பை அடையாளம் காண்பர். திரும்பக் கூறுவர். ஒலிவேறுபாடுகளுக்கேற்பத் துலங்குவார்.<br><br>பெயர் சொல்லும்போது அல்லது விளக்கம் கூறும்போது பொருட்களை அடையாளம் காட்டுவார்.<br><br>1 - 20 இலக்கங்களையும் அடிப்படையான 5 நிறங்களையும் அடையாளம் காட்டுவார்.<br><br>படங்களுக்கான பெயர், (கதிரை) விளக்கம் (ஓடு, நட) கூறுவர்.<br>பாட்டுப்பாடுவார் ( சிறிய) | சொல்லட்டைகள்<br>இலக்க அட்டைகள்<br>நிறப்பொருட்கள்<br>படங்கள்<br>தமிழரின் படங்கள்<br>கதைகள்<br>பாடல்கள்<br>பண்பாட்டுப்படங்கள்<br>(கும்பிடுதல்) | |

## 1.1.2 பேச்சு

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள் (Indicators) | உபகரணங்கள் | உசாத்துணைகள் |
|---|---|---|---|---|
| தனிச்சொற்கள் பொருட்களைக் குறிக்கின்ற பெயர்கள், செயற்பாடுகளுடன் தொடர்பான வினைச்சொற்கள், சிறிய சொற்றொடர்கள், கதைகள், விளையாட்டுக்கள், பாடல்களுடன் தொடர்பான சொற்றொடர்கள், சொற்கள், இலக்கங்கள் ( 1-20) நிறங்கள் (5) என்பவற்றைப் பயன்படுத்துவர். | அம்மா, அப்பா –<br>ஆசிரியர், மாணவர் -<br>ஐந்து, 5<br>கறுப்பு, கறுப்புக்குடை<br>சொற்கள்<br>படங்கள்<br>இலக்கங்கள்<br>வணக்கம் வாருங்கள்<br>போய்வருகிறேன்<br>பெரியமேசை<br>சிறியகதிரை<br>மழைபெய்கிறது<br>வாசியுங்கள்<br>நடவுங்கள்<br>நன்றிவணக்கம்<br>பிறந்தநாள் வாழ்த்துக்கள் | பெயர் கூறுவார்<br>பதில் சொல்லுவார்<br>விருப்பம் தெரிவிப்பார்<br>சொற்களைப் பயன்படுத்துவார்<br>ஆசிரியருக்கு விடைகூறுவார்<br>தாமாகப் பேசுவார்<br>நண்பருடன் உரையாடுவார்<br>பிறருக்கு வணக்கம் தெரிவிப்பார்<br>பிறருக்கு வாழத்து தெரிவிப்பார்<br>பிறரை வரவேற்பார்<br>வகுப்பிலிருந்து முறையாகப் பிரிவார்<br>நிறம் கூறுவார்<br>இலக்கம் தெரிவிப்பார்<br>பெரிய, சிறிய, அழகான முதலான அடைமொழிகள், விசேடணங்களைப் பயன்படுத்துவார். | சொல்லட்டைகள்<br>இலக்க அட்டைகள்<br>நிறப்பொருட்கள்<br>படங்கள்<br>தமிழரின் படங்கள்<br>கதைகள்<br>பாடல்கள்<br>பண்பாட்டுப்படங்கள்<br>(கும்பிடுதல்)<br>ஒலிநாடா<br>ஒளிநாடா | |

## 1.1.3 வாசிப்பு

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள் (Indicators) | உபகரணங்கள் | உசாத்துணைகள் |
|---|---|---|---|---|
| மாணவர்களுக்குப் பரிச்சயமானதும், வகுப்பில் கூறப்பட்டதுமான கதைகள், பாடல்கள், பாடப்பகுதிகளில் இருந்து வாசித்து தனிச் சொற்களையும், சிறுசொற்றொடர்களையும் வாசித்தல். தமிழ் எழுத்துக்களைச் சரியாக உச்சரித்தல். | 247 எழுத்துக்கள்<br>அரிச்சுவடி<br>ஆ ஒ ஓ ஏ ஐ எ ா ொ ோ ே ஜ<br>தொடர்பு காட்டும் பல்நிற அரிச்சுவடி<br>அம்மா, அப்பா –<br>ஆசிரியர், மாணவர் -<br>ஐந்து, 5<br>கறுப்பு, கறுப்புக்குடை<br>சொற்கள்<br>படங்கள்<br>இலக்கங்கள்<br>வணக்கம் வாருங்கள்<br>போய்வருகிறேன்<br>பெரியமேசை<br>சிறியகதிரை<br>மழைபெய்கிறது<br>வாசியுங்கள்<br>நடவுங்கள்<br>நன்றிவணக்கம்<br>பிறந்தநாள் வாழ்த்துக்கள்<br>கூட்டமாக்கல் அம்புக்குறிப் படங்கள்,<br>சொற்கள்<br>எழுத்துக்கள்<br>கொண்டதாள்கள் | எழுத்துக்களை அடையாளங் காட்டுவார்.<br>பொருட்கள், படங்கள் எழுத்துக்கள் சொற்களுடன் இணைப்பார். (அம்புக்குறி)<br>*ஒட்டுதல், பெயரிடல்<br>கூட்டமாக்குவார்<br>உச்சரிப்பார்<br>அ ஆ இ ஈ பாடல் வடிவில் கூறுவார்.<br>க கா கி கீ<br>நொடி (மாத்திரை) அறிந்து உச்சரிப்பார்.<br>(ஆனா ஆவன்னா **X** பயன்படுத்தமாட்டார் )<br><br>**கூட்டம்**<br>தளபாடம்,<br>நிறம்<br>இலக்கம்,<br>உயிர்,<br>மெய் ,<br>உயிர்மெய் உறவு<br>வகுப்புப் பொருள்<br>சமையலறைப் பொருள்<br>ஆண்<br>பெண்<br>* பொருளின் பெயரை ஒட்டுதல் | எழுத்தட்டைகள்<br>மறுபக்கம் சொற்களின் படங்களுடன் பெரிய சிறிய விளக்க நகைச்சுவைப் படங்கள்.<br>வேறுபாட்டைக் காட்டும் படங்கள்<br>சொற்சோடிகள்<br>கட்டில் / காட்டில்<br>சேறு/ சோறு<br>வேண்டாம்/ வேண்டும்<br>மாமா/ மாமி | |

## 1.1.4 எழுதுதல்

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள் (Indicators) | உபகரணங்கள் | உசாத்துணைகள் |
|---|---|---|---|---|
| பார்த்து அல்லது தெரிவு செய்து சொற்களை அல்லது எழுத்துக்களை எழுதுதல். | பெயரிடப்படாத பெயர் வழங்கப்பட்ட படங்கள்<br>இடைவெளி விடப்பட்டதும் எழுத்து சொற்கூட்டம் தரப்பட்டதுமான பயிற்சிகள்<br>ஓரெழுத்துச் சொற்களை விளக்கும் படங்களுடன் சொற்கள். | எழுத்துக்கள் சொற்களைப் பார்த்து எழுதுவார்.<br>உறுப்பெழுத்து எழுதுவார்.<br>தெரிவு செய்து எழுதுவார்.<br>இடைவெளி நிரப்புவார்.<br>(எழுத்து, சொல்)<br>உச்சரிப்புகூற எழுதுவார்.<br>படங்களுக்குப் பெயரிடுவார்.<br>சொல்ல (மிகச்சிறிய சொற்கள்)<br>ஓரெழுத்துச் சொற்கள் எழுதுவார். | அம்புக்குறியிட்ட, ஆரம்பிக்கும் இடம் தெளிவாகக் காட்டும் பகுதி பகுதியாக எழுத்துக்கள் காட்டும் பெரிய படங்கள் அல்லது வெள்ளைப் பலகையில் கீறக்கூடிய மாதிரிகள்<br>உதாரணம்,<br> | |

## Level 2

இந்த தரத்தில் (Level) மாணவர்கள் வகுப்பறைச் சூழலுடன் சேர்ந்து தனிநபர்கள், வீடு, குடும்பம், தனது அடுத்துள்ள சூழல் தொடர்பான விடயங்கள் செயற்பாடுகளில் தமிழைப் பயன்படுத்துவர். சொல்சாராத வகையிலோ, அல்லது பிரதான சிறுசொற்கள் மூலமாகவோ, அல்லது சிறிய சொற்றொடர் மூலமாகவோ அல்லது 2, 3 சொற்கள் கொண்ட சிறு வாக்கியங்கள் மூலமாகவோ தாம் விளக்கம் பெற்றமையை அல்லது தமது கருத்துக்களை வெளிப்படுத்துவர். தினங்கள் 7, மாதங்கள் 12, இலக்கங்கள் 1-40, குடும்ப உறவுமுறைகள், வகுப்பறை வீட்டுப்பொருட்கள், செயற்பாடுகள் (விலை) முதலானவற்றைப் பயன்படுத்துவர். சொல்வங்கியைக் கொண்டு, அல்லது நினைவில் உள்ளவற்றைக் கொண்டு அவர்களது கருத்துக்களைத் தமிழில் வெளிப்படுத்த அல்லது பிறரது கருத்துக்களை அறியக்கூடியவராவர். அவசியமானவிடத்து ஆங்கிலத்துடன் கலந்தாவது, கூற்றுவாக்கியம், வினாவாக்கியம், விளிப்பு வாக்கியம் என்பவற்றைப் பயன்படுத்துவர். தமிழர் பண்பாடு, கலாச்சாரம் தொடர்பான விழாக்கள் நிகழ்வுகளை, நிகழ்சிகள், படங்கள், ஒளிப்பதிவு நாடாக்கள் மூலம் அறிந்து கொள்வர். அவுஸ்திரேலியச் சூழலுக்கும் தமிழ்ச் சூழலுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை அறிவர். இது தொடர்பான வினாக்களை வினாவுவர். தமிழர் பகுதிகளில் உள்ள முக்கிமான மையங்கள், சின்னங்கள், பெருமைகளையும் அவுஸ்திரேலியச் சூழலில் உள்ள மையங்கள், சின்னங்கள், பெருமைகளையும் ஒப்பிடுவர்.

### 1.2.1 கேட்டல்

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள் (Indicators) | உபகரணங்கள் | உசாத்துணைகள் |
|---|---|---|---|---|
| மாணவர்களின் தனிப்பட்ட வீடு, வகுப்பு, பாடசாலை என்பவற்றிக்கு அப்பால் அயற்சூழல்களுடன் தொடர்புபட்டதாக இந்த level இல் மொழியும் உள்ளடக்கங்களும் அமைந்திருக்கும். | நேரம், தினம், மாதம், இலக்கம், உறவுமுறைகள், குடும்பமரம்,( family tree) வீட்டுப்பொருட்கள், வாக்கியங்கள், ஒலிநாடா | நேரங்கள் காலை, மாலை, பி.ப<br>தினங்கள் 7<br>மாதங்கள் 12<br>இலக்கங்கள் 40 வரை<br>குடும்ப உறவுமுறைகள் ஆங்கில தமிழ் வேறுபாடுகள்<br>வீட்டுப் பொருட்கள்<br>பாடசாலை<br>வகுப்பறை<br>செயற்பாடுகள் என்பவற்றுடன் தொடர்புடையதாக இணைப்பர். அடையாளங் காட்டுவர் விளக்கங்களைக் கேட்டு, பார்த்து ஏற்றபடி துலங்குவர்.( விளையாட்டு)<br>சொற்களுக்குப் பொருத்தமான படம்/பொருள், கீறுவார்/காட்டுவார்/தெரிவுசெய்வார். மறுதலையாக படத்திற்கு பொருத்தமான சொல்லை எழுதுவார் அல்லது சொல்லுவார்.<br>குரல் ஏற்றத்தாழ்வுகளுடன் கூடிய கூற்று வினா, நேர், மறை, வாக்கியங்களைக் கேட்டுத் துலங்குவார். | அட்டைகள்<br>பட்டியல்கள்<br>சொல்வங்கி<br>ஒலிநாடா<br>விளையாட்டு<br>பாடல்<br>கதை<br>செயற்பாட்டுப் படங்கள் | |

## 1.2.2 பேசுதல்

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள் (Indicators) | உபகரணங்கள் | உசாத்துணைகள் |
|---|---|---|---|---|
| வுகுப்பறை, சூழல், சமூகசெயல் முறைகளுடன் கூடிய அவற்றுடன் தொடர்பான வாழ்த்துக்கள், வானிலை முதலிய நாளாந்த விடயங்கள் பற்றிப் பேசுதல் பொருட்கள், உடைமைகள் செயற்பாடுகளுக்குப் பெயர் கூறல்.<br>வினாக்களுக்கு விடைதரல் | வாக்கியவங்கி<br>ஒலிநாடா<br>ஒளிநாடா<br>கதைகள்<br>விளையாட்டு<br>கதைப்படங்கள்<br>செயற்பாட்டுப் படங்கள் | 3, 4 சொற்கள் கொண்ட வாக்கியங்களைப் பேசுவார். வாழ்த்துவார். வாழ்த்துக்களை நன்றியுடன் ஏற்பார் (சமவயது, உயர்வயது வேறுபாடு)<br>உரையாடல், கருத்துத் தெரிவித்தலுக்கு ஏற்பத் துலங்குவார். தன்னைப்பற்றிய வினாக்களுச் சரியான விடை தருவார். (பூரணமான)<br>வகுப்பறைச் செயற்பாடுகளில் வாய்மொழி வினாக்களுக்குச் சரியான விடைதருவார். பொருட்களுக்கும் செய்கைகளுக்கும் பொருத்தமான அடைமொழி விசேடணங்களைச் சேர்த்துப் பேசுவார். நேரம், தினம், மாதம், 1-40 இலக்கம், உறவுமுறை, பொருட்கள் என்பவற்றை உச்சரிப்புத் தெளிவாகப் புலப்படும் வகையில் சொல்லுவார். அட்டைகளில், படங்களில் காட்டக் கூறுவார். | அட்டைகள்,<br>படங்கள்<br>White Board<br>பெரிய, சிறிய<br>உயரமான,<br>கட்டையான<br>கறுத்த, சிவப்பான<br>……படங்கள்<br>பொருட்கள்<br>ஒலிப்பதிவுக்கருவி | |

## 1.2.3 வாசித்தல்

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள் (Indicators) | உபகரணங்கள் | உசாத்துணைகள் |
|---|---|---|---|---|
| வழங்கப்படும் பாடப்புத்தகத்தில் தலைப்பு, சிறுவாக்கியங்கள், சொற்றொடர்கள் ஆகியவற்றை வாசித்தல். | தெரிவு செய்யப்பட்ட பாட அலகுகள் அச்சிடப்பட்டதாள்கள் தமிழருக்கு பொருத்தமான தலைப்புக்களில் பந்திகள் கதைப்படங்கள், கதைகள் சொற்கூட்டங்கள் சொற்கூட்டத் தலைப்புக்கள் நொடிகள். | குறியீட்டு அறிவுடன் வாசிப்பார். பாடநூலை ஏற்றஇறக்கங்களுடன் உரத்து வாசிப்பர். வினையடிகள், சொற்களை அறிந்து வேற்றுமை உருபுகள் புலப்படும்வண்ணம் வாசிப்பர். நன்கு பழக்கப்பட்ட, (தெளிவான) பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து நிரப்பி வாசிப்பார்.<br><br>ஆசிரியரைப் பின்பற்றிக் குரல் வேறுபாடுகளை ஒலித்துக் காட்டுவர். பாவம், சந்தோசம்------ கூட்டங்களுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிந்து கூறுவர். படங்கள் பொருட்களுக்குப் பொருத்தமான பெயர், வினைச் சொற்களைத் தெரிவிப்பர். கதைகளுக்கு, பாத்திரங்களுக்கு, தலைப்புக்குப் பொருத்தமான ( கதை) வாக்கியவரிகளைத் தாமாக எதிர்வு கூறுவர். | அச்சிடப்பட்ட பந்திகள்<br><br>படங்கள்<br><br>ஒளி, ஒலிநாடாக்கள்<br><br>சொல், செயற்பாட்டு அட்டைகள். | |

## 1.2.4 எழுதுதல்

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள் (Indicators) | உபகரணங்கள் | உசாத்துணைகள் |
|---|---|---|---|---|
| சாதாரணவாக்கியம் ஒன்றைப் பூர்த்தி செய்யக்கூடியதாகக் கீறிட்ட இடங்களில் சொற்களை அல்லது சொற்கூட்டங்களை எழுத்துப் பிழையின்றி எழுதுதல். | பொருத்தமான சொல்வங்கிகள், இடைவெளிகொண்ட வாக்கியங்கள், இடம்மாறிக்கிடக்கும் சொற்கூட்டங்கள், கவாச்சிமிக்க பொருத்தமான தமிழரின் பண்பாடு பெருமைகளை வெளிப்படுத்தும் பந்திகள். | சரியாக சொற்களை எழுத்துக்கூட்டி எழுதுவதற்கு எழுத்து உச்சரிப்பு தொடர்பான அறிவைப் பயன்படுத்துவார்.<br>வகுப்பறைப் பொருட்கள், வீட்டுப்பொருட்கள் கொண்ட சொற்பட்டியலிலிருந்து அல்லது சொல்வங்கியிலிருந்து தெரிவுசெய்து சொல்லை சொற்கூட்டங்களைப் பிரதிசெய்வார். ஞாபகத்திலிருந்து சில சொற்களை அல்லது சொற்கூட்டங்களை கீறிட்ட இடங்களில் நிரப்புவார். மாறிக்கிடக்கும் சொற்கூட்டங்களை (3, 4) வாக்கியம் அமையுமாறு வரிசைப்படுத்துவார். தானே சொந்தச் சொற்பட்டியலொன்றை சொற்களையும், உச்சரிப்பையும் விளக்கும் வகையில் தயாரித்துப் பெருக்கிக் கொள்வார். பிரதியைத் தனது பட்டியலுடன் ஒப்பிட்டு தனது எழுத்து வேலைகளைத் தானே சரிபார்ப்பார். | | |

## Level 3

இந்த தரத்தில் (Level) மாணவர்கள் தமது நிஜவாழ்க்கையிலிருந்து கருத்து நிலை உலகிற்கு மாறும் வகையில் தமிழைப் பயன்படுத்துவர். சிறிய விடயங்களை, அறிவித்தல்களை வாசித்தறியவும், பாடசாலை, வீடு, வகுப்பறை தொடர்பான விடயங்களையும் தமக்கு ஆர்வமாகவுள்ள ஏனைய விடயங்களையும் தமிழில் உரையாடவும், எழுதக்கூடியவராவர். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் கொண்ட கூற்றுவாக்கியங்களை அல்லது வினாவாக்கியங்களைப் பயன்படுத்துவர். பெயர்ச்சொற்களை இணைத்துப் புதிய சொற்றொடர்களை உருவாக்குவர். அடிப்படை வாக்கிய அமைப்புத் திறனைப் பயன்படுத்தி சிறுவாக்கியங்கள் மாதிரிவாக்கியங்களை அமைக்கவும் சரிபார்க்கவும் திருத்தவும் கூடியவராவர். சிறிய கூற்றுக்களை வைத்துக் கொண்டு புதிய சொற்களின் பொருளை அறிவர். அகராதியைப் பயன்படுத்துவர். திணை, பால், எண், இடம், காலம் ஆகிய வேறுபாடுகளுக்கேற்ப வாக்கிய அமைப்புக்களை அறிவதுடன் ஆங்கில மொழியுடன் ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமைகளை அறிவர். தமது பிரதேச( இலங்கை, இந்தியா,….) மக்களின் வாழ்வு நடவடிக்கைகள், தினசரிச் செயற்பாடுகள், பாடசாலைக்கல்விச் செயற்பாடுகள், சமகால நிகழ்வுகள் பற்றி அறிவதுடன் தாமாகவே செய்திகளைச் சேகரிப்பதற்கு இணையத்தளங்கள், தமிழ்ச் செய்தித் தாள்கள் , ஏனைய தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவர். தமிழ்மொழி பேசப்படும் நாடுகளையும் அந்நாடுகனின் வரலாறு, புவியியல் தொடர்பான அம்சங்களையும் அறிவர். உலகமயமாதல் என்ற அடிப்படையில் பல்கலாச்சார அம்சங்களையும், தமிழை அல்லது ஒன்றுக்கு, இரண்டிற்கு மேற்பட்ட மொழிகளைப் பயன்படுத்துவதனால் பெறப்படும் சிறந்த பயன்களை அறிவர். அனுபவிப்பர்.

## 1.3.1 கேட்டல்

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள் (Indicators) | உபகரணங்கள் | உசாத்துணைகள் |
|---|---|---|---|---|
| சாதாரண, சிறிய செய்திகள் அறிவித்தல்கள் முதலியவற்றை கேட்டு விளங்குவர். அட்டவணைகள், சொல்வங்கிகளைக் கொண்டு பொருத்தமான சொற்கள், சிறு சொற்றொடர்கள், வாக்கியங்களைத் தெரிவு செய்வர். | பொருத்தமான கூற்று, வினா வாக்கியங்கள். விளம்பரங்கள் செய்தித்துணுக்குகள், அழைப்பிதழ்கள், அறிவித்தல்கள், படிமுறை வாக்கியங்கள்,ஆர்வத்தைத் தூண்டும் பந்திகள், செய்திகள், நகைச்சுவைத் துணுக்குகள், பாடல்கள், நாடகங்கள், கலந்துரையாடல், ஒலிப்பதிவுகள், படங்கள்,கதைகள், கதைப்படங்கள், சொல்வங்கி வாக்கியவங்கி. | கூற்றுவாக்கியங்கள்,வினாவாக்கியங்களை வேறுபடுத்தி ஏற்றபடி துலங்குவர். குறிப்பிட்ட வாக்கியங்கள் செய்திகள், அறிவித்தல்களைப் படங்களுடன் இணைப்பர். பல்தேர்வு வினாக்களுக்கு விடையளிப்பர்.<br>கட்டளை வாக்கியங்களைப் பின்பற்றி குறிப்பிட்ட காரியங்களில் ஈடுபடுவர். உதாரணம்-- தேசப்படமொன்றில் இடம் குறித்தல். மாறிக்கிடக்கும் (தேநீர் தயாரிக்கும்) படிமுறை வாக்கியங்களை இனங்கண்டு இலக்கமிடுவர். கலந்துரையாடலை, மின்னஞ்சல் செய்திகளை, செய்தி அட்டைகளை வாசித்து மதிப்பிட்டு கருத்துக்களை வெளிப்படுத்துவர். நிறம், அளவு, தூரம், எண்ணிக்கை, வடிவம், தொடர்பான வினாக்களுக்கு விடைதருவர். உணர்வுகளையும், எண்ணங்களையும் கருத்துக்களையும் தமிழில் வெளிப்படுத்துவர். பொருத்தமான, விருப்பமான சொற்களைப் பயன்படுத்தி தரப்பட்ட தலைப்புக்களில் கருத்துள்ள பந்திகளை எழுதி வாசிப்பர். நாடகம் நடிப்பர். பாத்திரமேற்றுக் கருத்து வெளியிடுவர். மேற்கோள் காட்டிக் கருத்தை வலியுறுத்துவர். | ஒலிநாடா<br>ஒளிநாடா<br>நாடகம்<br>நூல்கள்<br>பத்திரிகைகள்<br>இணையத்தளவிலாசங்கள்<br>வானொலி<br>அலைவரிசைகள் | |

### 1.3.2 பேசுதல்

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள் (Indicators) | உபகரணங்கள் | உசாத்துணைகள் |
|---|---|---|---|---|
| வாக்கியங்களை அமைத்து வினாக்களை ஆக்கி உரையாடல் வாழ்த்துத் தெரிவித்தல், நன்றியுடன் ஏற்றுக் கொள்ளல். செய்திகளை விருப்புக்களை வெளியிடல். உதவிகேட்டல் நண்பர்களைப் பற்றியும், தமது நாளாந்தச் செயற்பாடுகள் பற்றீயும் அதனைப்பற்றிய விளக்கம், வர்ணனைகளுடன் உரையாடுதல். கருத்து வெளிடுதல். | கலந்துரையாடல் தலைப்புக்கள் பொருத்தமான செய்திகள். கருத்துக்கள் சொற்களஞ்சியம் அடைமொழிகள் விசேடணங்கள் வாழ்த்து, அறிமுகம் தொடர்பான சிறப்பான சொற்றொடர்கள் | பொருத்தமான வகையில் வாழ்த்துக்கூறி, பிறரை அறிமுகஞ் செய்து உரையாடுவர். சொந்தத் தேவைகளுக்குத் தமிழில் கருத்துப் பரிமாற்றம் செய்வர். ஏற்ற இறக்கங்களுடன் ஒலிவேறுபாட்டை அறிந்து உரையாடுவர். கருத்து நிறைந்த வினாக்களின் பொருளறிந்து ஆம், இல்லை விடையளிப்பர். வாக்கிய அமைப்பபைச் சரியாக உபயோகித்து ஆசிரியரிடம் விளக்கம் கூறி உதவிகேட்பர். சிறிய, எளிய, அடைமொழிகள் விசேடணங்கள் என்பவற்றைச் சரியாக உபயோகிப்பர். பொருட்களை அல்லது நபர்களை வர்ணித்து விளக்கம் கூறி உரையாடுவர். | வானொலி உரையாடல் பேட்டிகள்.<br>சினிமா வசனங்கள்<br>நகைச்சுவைத்துணுக்குகள்<br>திரைப்படங்கள்<br>சமகாலச்செய்திகள்<br>பண்பாட்டு அம்சங்கள்<br>கொண்டாட்டங்கள்.<br>விழாக்கள் பற்றிய கட்டுரைகள்.<br>தமிழர்பெருமை பெறும் விடயங்கள்.<br>இணையத்தளங்கள்<br>பத்திரிகைகள் | |

### 1.3.3 வாசித்தல்

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள் (Indicators) | உபகரணங்கள் | உசாத்துணைகள் |
|---|---|---|---|---|
| கிடைக்கப்பெறும் பலவித செய்திகள், தலைப்புக்கள், பந்திகள், விளக்கவுரைகள் முதலானவற்றிலிருந்து பொருத்தமானவற்றைத் தெரிவுசெய்து வாசித்தல். விமர்சனக் கருத்துக்கள், விளக்கமாக விபரிக்கப்பட்ட கதைகள், பாடல்கள், நாடகங்கள் முதலியவற்றிலிருந்து கருத்துக்களைப் பெற்று பொருத்தமானவற்றைத் தெரிவு செய்து வாசித்தல். | கதைகள்,<br>கருத்துக்கள்<br>அறிவுரைகள்<br>செய்திகள்<br>தரமான வினாக்கள்<br>இடைவெளிகள் கொண்ட கிரகித்தல் பயிற்சிகள் கட்டுரைகள் புதிய சொற்களஞ்சியம். | சுயமாக வாசித்து அறிந்துகொண்டு குறிப்பிட்ட கருத்துக்களை வலியுறுத்தும் அல்லது தெளிவாக்கும் பகுதிகளைத் தெரிவு செய்து அவ்வாக்கியங்களை, பந்திகளை குறியீட்டுப் பயன்பாட்டுடன் ஏற்ற இறக்கங்களுடன் வாசிப்பர். தாம் அறிந்து வைத்திருக்கும் எழுத்தொலிகளைக் கொண்டு புதிய சொற்களை எழுத்துக் கூட்டி வாசிப்பர். வாக்கியங்களையும், பந்திகளையும் நிறைவு செய்வதற்குப் பொருத்தமான சொற்களை, சொற்கூட்டங்களைத் தெரிவு செய்வர். பந்திகளுக்கேற்ற தலைப்பை, வினாக்களுக்கேற்ற விடைப்பந்தியை, விடைப்பந்திகளுக்கேற்ற வினாவை தெரிவு செய்து இணைத்து வாசிப்பர். மாறிக்கிடக்கின்ற கதைச் சம்பவங்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்தி வாசிப்பர். | ஒலிநாடாக்கள்<br>கதைகள்<br>நாடகள்<br>சினிமாப்படம்<br>கட்டுரைகள்<br>செய்தித்தாள்கள் | |

## 1.3.4 எழுதுதல்

| | **செயற்பாடுகள்** | **நடத்தை நோக்கங்கள் (Indicateors)** | **உபகரணங்கள்** | **உசாத்துணைகள்** |
|---|---|---|---|---|
| தமது சொந்தக் கருத்துக்கள், செய்திகளை அறிவிக்கும் சிறுவாக்கியங்களை எழுத்துப்பிழை வாக்கியப்பிழையின்றி எழுதுதல். தரமான செய்திகளை விடயங்களைப் பதிவு செய்து கொள்ளலும் விளங்கி வர்ணித்து எழுதுதலும் | கருத்துமிக்க பந்திகள் அட்டவணைகளில் பட்டியல்களில் அமைக்கக்கூடிய கருத்துக்கள் சொற்களஞ்சியம்<br>கருத்துக்களை இணைக்கக்கூடிய தனிவாக்கியக் கூட்டங்கள் உருபுகள்<br>இடை, உரிச் சொற்கள் | வாக்கிய ஒழுங்குகளைக் கவனித்து எழுவாய், பயனிலை,செயப்படுபொருள்,அடைமொழி, விசேடணம் உருபுகள் என்பவற்றைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்குவர். உருபுகளையும் இணைக்கும் சொற்களையும் பயன்படுத்தி கருத்துள்ள தனிவாக்கியங்களை கூட்டுவாக்கியமாக அல்லது கருத்துத்தொடர்புள்ள வாக்கியங்களாக எழுதுவர். செய்திகள் கருத்துக்களை அட்டவணைகளாக, பட்டியல்களாக, சட்டகமாக( படங்கள் பயன்படுத்தி)பதிவு செய்வர். சொற்களஞ்சியத்தை அல்லது அகராதியொன்றை அல்லது பொருத்தமான சொற்கூட்மொன்றை உருவாக்கி விரிவுபடுத்தித் தொடர்ந்து எழுதிவருவார். எழுத்துப் பிழைகளைக் கண்டு பிடித்துச் சரிபார்த்து, பிழைதிருத்திச் சரியாக எழுதுவார். கணினி. இணையத்தளங்கள், உசாவு-நூல்கள்,மேற்கோள்கள் முதலியவற்றைப் பயன்படுத்தி நல்ல பந்திகளை உருவாக்குவர். பாடல்களைப் பயன்படுத்தி நாடகம், சினிமாவைப் பயன்படுத்தி கருத்துக்களை எழுதுவர். | படங்கள்<br>ஒலி ஒளி நாடாக்கள்<br>அகராதி சொற்களஞ்சியம்<br>இணையவிலாசங்கள்<br>சமகாலச்செய்திகள்<br>புதினத்தாள்கள்<br>மாறுபட்டகருத்துக்கள்<br>சாதாரண வழமையான பாடத்திட்டத்துடன் தொடர்பான தலைப்புக்கள் | |

## Level 4

மாணவர்கள் தமது சொந்த அனுபவ உலகத்துடனும் கருத்துநிலை உலகத்துடனும் குறிப்பாக தமது வழமையான கல்வியுடன் தொடர்பான பாடத் தலைப்புக்கள் தொடர்பாக தமிழை விளக்கத்துடன் பயன்படுத்துவர். தமது சொந்த விடயங்களையும், செய்திகளையும், அபிப்பிராயங்கள் கருத்துக்களையும் தமது குடும்பம், நண்பர்கள், தமது விருப்பங்கள், தாம் முன்னுரிமை வழங்கும் செயல்கள் தொடர்பாகவும் கருத்துப்பரிமாற்றங்கள் செய்வர். தமிழில் வேண்டுகோள் விடுக்கவும் தெரிவுகளைச் செய்யவும் சில ஒழுங்குகளை மேற்கொள்ளவும் தமிழைப் பயன்படுத்துவதுடன் நகைச்சுவைத் துணுக்குகள் கருத்துக்கள் கொண்ட உரையாடல்களை ஆக்கவும் பயன்படுத்தி உரையாடவும் தகுதி பெறுவர். தொடர்புடையதும் மூன்று அல்லது நான்கு சொற்களைக் கொண்டதுமான வாக்கியங்களைப் பயன்படுத்தி சிறிய பந்திகளை, விளக்கவுரைகளை, கடிதங்களை எழுதும் ஆற்றல் பெறுவர். செய்தித்துணுக்குகள், விளக்கப்படங்கள், மாதிரியுருக்கள், கருதுகோள்கள், வரைபுகள் முதலியவற்றையும் பயன்படுத்தி வாக்கியங்கள் மூலம் கருத்து வெளியிடுவதுடன் இவற்றைப்பயன்படுத்தி வெளியிடப்படும் கருத்துக்களை தாமும் அறிந்து கொள்வர். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், அடைமொழி, விசேடணம் முதலியவற்றை பயன்படுத்தி வாக்கியம் அமைக்கவும் அவ்வாறான வாக்கியங்களை விளங்கிக் கொள்ளவும் விரிவாக்கவும் தகுதிபெறுவர். அடிப்படை இலக்கண அறிவை குறிப்பாக பல்வகைப் பெயர்ச்சொற்களையும், வினைச்சொற்களின் எல்லா வடிவங்களையும் வேறுபடுத்தி தேவைக்கேற்ப உபயோகிக்கக்கூடியவராவர். அதிகமாகப் பயன்படுத்தப்படும் மரபுச்சொற்றொடர்கள், பழமொழிகள், அடுக்குமொழிகள் பயன்படுத்தல் எதிர்பார்க்கப்படுகிறது. தமக்குப் புதியதான சொற்களை உச்சரித்து எழுதவும் அகராதியைப் பயன்படுத்தி அல்லது தர்க்கரீதியாக முன்னால் அல்லது பின்னாலிலுள்ள சொற்களைக் கொண்டு புதிய சொற்களின் கருத்தை அறியும் வல்லமை பெறுவர். தமிழ் வாக்கிய அமைப்பையும், மொழிகற்பிக்கப்படும் வகைகளையும் அறிந்து தேவைக்கேற்ப பயன்படுத்துவதற்கு தாமாக மீளவருவிக்கக்கூடியவராவர். மாணவர்கள் பரந்த தமிழ்கலாச்சாரத்தின் குறிப்பான தலைப்புக்களை வரலாறு, பிரதேசம், புகழ்பெற்ற பெரியோர்கள் போன்ற அம்சங்களுடன் கற்றுக்கொள்வர். தமிழர்களின் வேறுபட்ட வாழ்க்கை முறைகளையும், அவுஸ்திரேலியா வாழ்க்கை முறையில் செல்வாக்கு பெற்றுள்ள தமிழ் கலாச்சாரத்தின் அம்சங்களைப்பற்றியும் அறிந்து கொள்வர். இன்னொரு மொழியைக் கற்பதன் குறிப்பாக தமிழ் கற்பதன் தேவையையும் அவசியத்தையும் விளக்கக்கூடியவராவர். அவுஸ்திரேலியாவில் தமிழர்களின் வாழ்க்கைமுறைகள், பழக்கவழக்கங்கள் பற்றியும் தமிழ்பிரதேச வாழ்க்கைமுறை பழக்கவழக்கங்களுக்கும் இவற்றுக்குமுள்ள ஒரேதன்மைகள், வேறுபாடுகள் என்பவற்றை விளங்கிக்கொள்வர்.

## 1.4.1 கேட்டல்

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள் (Indicators) | உபகரணங்கள் | உசாத்துணைகள் |
|---|---|---|---|---|
| பந்திகளின் பிரதான கருத்தை விளங்கிக் கொண்டதை வெளிப்படுத்தல். சமூகத்துடன் இடைத்தாக்கம் புரியும் வகையில் பிரதான கருத்துக்களுக்கு ஆதரவான மேலதிக செய்திகள் தகவல்களைப் பெறுதல், அளித்தல். வாய்மூலமான வினாக்கள்மூலம் மேலதிக விபரங்களைக் கேட்டுப் பெற்று கருத்துக்களை ஒழுங்குபடுத்தி கேட்கப்பட்ட வடிவத்தில் எழுத்துமூலமோ வரைவு, விளக்கப்படங்கள் மூலமோ முன்வைத்தல். | எதிர்பார்க்கப்படும் கருத்துக்கள் நிறைந்த செய்திகள், தகவல்கள் சம்பவங்கள் என்பவற்றை உள்ளடக்கிய வாக்கியங்கள், உரைகள், பந்திகள் எழுத்தாளரின் கருத்துக்களும் அவர்களால் மேற்கொள்ளப்படும் மேற்கோள்களும் கொண்ட இணைந்துவரும் கட்டுரைகள். விளக்கவுரைகள். | பொதுவாக வெளியிடப்படும் செய்திகள், விளக்கங்களிலிலிருந்து பிரதான கருத்துக்களைப் பெற்ற நபர்களின் பெயர்கள் அவர்களின் தனிப்பட்ட விபரங்கள் தொடர்பானவை; நடைபெற்ற சில சம்பவங்களும், பொருட்கள் விடயங்கள் என்பவற்றின் தன்மைகளும் தரம் முதலான பண்புகளும், என்ற வகைகளில் வேறுபடுத்துவார். கூற்று, வினா, வேண்டுகோள், வியங்கோள், கட்டளை முதலான வாக்கியவேறுபாடுகளை இனங்காட்டுவார். பயன்படுத்துவார். பயன்படுத்தப்படும்போது ஏற்றபடி துலங்குவார். ஒருவரால் நேரில் தெரிவிக்கப்படும் கருத்துக்கும் அவரால் மேற்கோள் காட்டப்படும் விடயங்களுக்கும் வேறுபாட்டைத் தெரிவிப்பார். | பத்திரிகைகள்<br>சஞ்சிகைகள்<br>கட்டுரைகள்<br>இணையத்தளத்தில் உள்ள தலைப்புகளின் கீழ் உள்ள விடயங்கள். | |

## 1.4.2 பேசுதல்

| | **செயற்பாடுகள்** | **நடத்தை நோக்கங்கள் (Indicators)** | **உபகரணங்கள்** | **உசாத்துணைகள்** |
|---|---|---|---|---|
| மக்கள், இடங்கள், சம்பவங்கள் தொடர்பான உண்மையான செய்திகள் தகவல்களை வழங்குதலும் கேட்டறிதலும் . அவற்றைப்பற்றிய தமது எண்ணங்களையும் உணர்வுகள் விருப்புக்கள் முதலியவற்றையும் வெளிப்படுத்தி செய்தித்தொடர்பைக் கருத்தை நிறைவு செய்தலும். | திட்டமிடப்பட்டு நடத்தை நோக்கத்தை அடையும் வகையில் தயாரிக்கப்பட்ட கட்டுரைகள், கருத்துவாக்கியங்கள்,உரையாடல்கள், குறிப்புக்கள் மாணவரின் சமகாலக்கல்விவாழ்வு, பொழுதுபோக்குகல்வி, பண்பாட்டு அம்சங்கள் தொடர்பானவையும், பிரதான பாடசாலையின் கலைத்திட்டங்களுடன் தொடர்புடைய விடயத் தலைப்புக்கள். | கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிப்பதன்மூலம் தமது விருப்புக்களை வெளிப்படுத்துவார். பிரதான, சில மூலத்தகவல்களைக் குறிப்பாக விலை, நேரம், இடம் தொடர்பானவற்றைக் கேட்டுப்பெறும் வகையில் வினாக்களைப் பயன்படுத்துவார். உரையாடலின்போது விடுபட்ட கவனிக்கப்படாத தகவல்களை அடையாளங்கண்டு அவற்றை அறிந்து கொள்ளக்கூடிய வகையில் வினாக்களைக் கேட்டுத் தகவல்களைத் திரட்டுவர்.உ-ம் இருவர் அல்லது சிலர் ஒன்றாக வெளியே செல்வதற்கு எல்லோருக்கும் பொருத்தமானநேரம் ஒன்றைத் தெரிவு செய்வார். கருத்துப் பரிமாற்றத்தின்போது அல்லது கருத்துக்கள் முன்வைக்கப்படும்போது அவற்றிலிருந்து பொருத்தமான/ சரியான தீர்மானத்திற்கு வருவார். கலந்துரையாடல்கனின்போது நல்ல சமூக இடைத்தாக்கம் ஏற்படக்கூடிய வகையில் சிறந்த உரையாடல் படிமுறைகபைப் பயன்படுத்துவார். | | |

### 1.4.3 வாசிப்பு

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள் (Indicators) | உபகரணங்கள் | உசாத்துணைகள் |
|---|---|---|---|---|
| தகவல்கள் செய்திகளில் இருந்து பிரதான மூலக்கருத்துக்களைப் பெற்று சரியான தீர்மானத்திற்குவர அல்லது நல்ல முடிபுகளை மேற்கொள்ளும் வகையில் அவற்றை வரிசைப்படுத்தியும், வகைப்படுத்தியும் ஒப்பிட்டும், அட்டவணைப்படுத்தியும் பயன்படுத்தல். உ-ம் எளிமையான விஞ்ஞானப் பரிசோதனையொன்றை வாசித்தல். . | L.4.2 பேசுதலில் தரப்பட்டவையும், கடிதங்கள், திட்மிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வாக்கியங்கள் குறிப்புக்கள். | அசைபிரித்து குறியீட்டம்சங்கள் வெளிப்படும்வகையில் தொனிவேறுபாட்டுடன் கவனமாக உரத்து வாசிப்பர். வாசிப்பதன்மூலம் பொருள் கொள்வர். தெரியாத சொல்லின் பொருளை அச்சொல்லின் முன், பின்னால் உள்ளவையும், தெரியாத சொல்லின் பொருளைக் குறிப்பால் உணரவைக்கக் கூடியனவுமான சொற்களைக் கொண்டு அறிந்து கொள்வார். பலவகையான தகவல்கள், தலைப்புக்களில் வேறுபாடான அமைப்புக்கள் கருத்துக்கள் கொண்டவற்றை அடையாளங் காட்டுவார். தகவல் ஒன்றிலிருந்து அல்லது பந்தியொன்றிலிருந்து<br>1.அது எழுதப்பட்டதன் நோக்கம்,<br>2 அது எழுதப்பட்டுள்ள விதம்,<br>3. அதன் பண்பாட்டுரீதியான பொருந்துதன்மை,<br>4. கருத்துக்களை இணைப்பதற்கு வாக்கியங்களைத் தொடர்புபடுத்த அதில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள்.<br>முதலானவற்றை அடையாளம் காட்டுவார்.<br>அட்டவணையில், அல்லது சட்டகம் ஒன்றில், அல்லது பட்டியல் ஒன்றில் தகவல்களை ஒழுங்காக வரிசைப்படுத்துவார். | | |

### 1.4.4 எழுதுதல்

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள் (Indicators) | உபகரணங்கள் | உசாத்துணைகள் |
|---|---|---|---|---|
| தனது சொந்த விடயங்கள் விபரங்களை வெளியிடும் வகையில் பந்தியொன்றை எழுதுதல். உரைநடைகளிலிருந்து அல்லது இலகுவான கடிதங்களிலிருந்து அல்லது அட்டவணைகள், தகவல்தாள்கள், அழைப்பிதழ்கள் முதலியவற்றிலிருந்து பெறப்படும் தகவல்கள், விபரங்களைப் பொருத்தமான அடிப்படையில் வரிசைப்படுத்தி எழுதுதல். | இணைப்புச் சொற்கள், பெயரெச்சங்கள் வினையெச்சங்கள் இணையக்கூடிய வாக்கியங்கள். | தர்க்கரீதியாக, நியாயமானமுறையில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகத் தகவல்களை வரிசைப்படுத்தி எழுதுவார். பிறருடன் கருத்தொருமித்திருக்கக்கூடிய வகையில் பந்தியொன்றை எழுதுவார். (கருத்துத் தொடர்புடைய 3,4 வாக்கியங்கள்) ஆனால், மேலும், ஏனெனில், ஆகவே, அப்படியென்றால், எவ்வாறெனின் முதலான இணைப்புச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை இணைத்து எழுதுவார். தேவைக்கேற்ற வகையில் எழுத்துருவாக்கத்தை மாற்றிப் பயன்படுத்துவார். பெயரெச்சம், வினையெச்சம் முதலியவற்றைப் பயன்படுத்தி வாக்கியங்களை விரிவுபடுத்துவார். <br><br> தமிழ் சொற்களஞ்சியத்தை அல்லது தமிழ் அகராதியைப் பயன்படுத்திச் சொல்லொன்றின் பொருளைத் தெரிந்து கொள்வார். | அகராதி <br> சொற்களஞ்சியம் | |